# புரட்சிப் பெரியார் முழக்கம்

திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு

www.dvkperiyar.com

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2051 | அக்டோபர் 29, 2020 | புரட்சி 19 | முழக்கம் 14 | விலை: ரூ.3.00


## இலவசம்; கொரானா தடுப்பு ஊசி

'பீகாரில் பா.ஜ.க.வுக்கு ஓட்டுப் போட்டால், கொரானா தடுப்பு ஊசி இலவசம்' என்கிறது பா.ஜ.க.வின் தேர்தல் அறிக்கை. "அது என்ன பீகாருக்கு மட்டும் இலவசம்! மற்ற மாநிலங்கள் என்ன குற்றம் செய்தன? பெரும் தொற்று நோயிலும் ஓட்டு அரசியலா?" என்று கேள்வி கேட்கின்றன எதிர்கட்சிகள்.

கொரானா வைரஸ், உலகம் முழுதும் மனிதர்களிடம் மட்டுமே பரவுகிறது. ஆனால் நமது இராமராஜ்யத்தில் தான் தேர்தல் அறிக்கைகளிலும் கொரானா தொற்றிக் கொண்டுவிட்டது. நாடாளுமன்றத் தேர்தல் இப்போது வராமல் போனதே என்பதற்காக மக்கள் மகிழ்ச்சியடைய வேண்டும். வந்திருக்குமானால் எங்கள் கூட்டணிக்கு ஓட்டுப் போட்டவர்களுக்கு மட்டுமே கொரானா சிகிச்சை தரப்படும் என்று தேர்தல் அறிக்கை வந்திருக்கும். 'பூண்டு, வெங்காயம்' சாப்பிடாத பரம்பரையில் வந்த நிதி அமைச்சர் நிர்மலா கூச்சப்படாமலேயே அறிவித்திருப்பார்.

தடுப்பூசி கண்டுபிடித்து உலக மானுடம் முழுமையும் பாதுகாக்க உலக நாடுகள் கவலையோடு உழைக்கின்றன. இதோ பாருங்கள்! பிரேசில் நாட்டில் சோதனைக்காக தடுப்பூசி போட்டுக் கொண்ட 28 வயது இளம் மருத்துவர் இறந்தே போய் விட்டாராம். உயிர்ப் பலி நிகழ்ந்தாலும் தடுப்பூசி சோதனைகளை தொடர்வோம் என்கிறது, அந்நாட்டு அரசு. அவர்கள் மக்களை நேசிப்பவர்கள்; நாம் பசுமாட்டை பூஜிப்பவர்கள்!

ஒரு மாநில தேர்தலில் ஓட்டு வாங்க எந்த நாட்டுக்காரனோ கண்டுபிடிக்கப் போகும் தடுப்பூசியை ஓட்டுக்காகப் பேரம் பேசும் 'ஆன்மிக' பூமி இது!

தேர்தலில் போட்டி கடுமையாகி பா.ஜ.க. தோற்கும் நிலைக்கு வருமானால், தடுப்பு ஊசியோடு கொரானா வைரசையும் இலவசமாக வழங்குவோம் என்றுகூட அறிவிப்பார்கள். யார் கண்டது?

இனி அடுத்தடுத்து தேர்தல் அறிக்கைகளில் என்ன புரட்சிகள் வரப் போகிறதோ தெரியவில்லை.

- பா.ஜ.க.வுக்கு வாக்களித்தால் பசு மாட்டின் 'புண்ணிய தீர்த்தம்' பாட்டிலில் அடைத்து இலவசமாக வழங்கப்படும்.
- இலவச தரிசனம்; இலவச மொட்டை; இலவச பிரசாதங்கள் வழங்குவது குறித்து சட்ட நிபுணர்களைக் கொண்ட குழு ஒன்று அமைக்கப்படும்.
- சொந்த வீட்டுக்காரர்கள் வாடகை தர வேண்டாம்; வீடுகளுக்குள் குடும்பத்தினர் கலந்து பேசலாம்; வெளியூர் பயணத்துக்கு பேருந்திலோ அல்லது தொடர்வண்டியிலோ அல்லது இரண்டிலுமே போய் வரலாம். 'பாஸ்போர்ட்' தேவை இல்லை. நித்யானந்தாவின் கைலாசத்துக்குப் போவதற்கு மட்டும் பாஸ்போர்ட் உண்டு.
- மோடியின் 'மன்கி பாத்' பேச்சைக் கேட்பவர்களுக்கு வங்கிக் கணக்கில் பணம் போடப்படும்

என்றுகூட எதிர்காலங்களில் தேர்தல் அறிக்கைகள் வரலாம்.

கடைசியில் கொரானா தடுப்பு ஊசியை ஏதோ ஒரு நாடு கண்டுபிடித்து விட்டதாகவே வைத்துக் கொள்வோம்!

அப்போது என்ன சொல்வார்கள் தெரியுமா? இது என்ன அவ்வளவு பெரிய கண்டுபிடிப்பா? இராமயண, மகாபாரதக் காலத்திலேயே எங்களிடம் இந்த மருந்து இருந்திருக்கிறது. திருவாளர் அனுமான் அப்படியே தூக்கிச் சென்றானே சஞ்சீவி மலை, அந்த மலையிலிருந்த மூலிகை தான் இப்போது வந்திருக்கிற கொரானா தடுப்பு மருந்து என்று பேச ஆரம்பித்து விடுவார்கள்!

இதற்குப் பெயர்தான் 'இந்துத்துவா' அரசியல்.

**– கோடங்குடி மாரிமுத்து**

**– புரட்சிப் பெரியார் முழக்கம் 29.10.2020**

### விடுதலை சிறுத்தைத் தோழர்களுடன் கழகத்தினர் பங்கேற்பு

# மக்கள் விரோத மனுசாஸ்திரத்தை எதிர்த்து கண்டன ஆர்ப்பாட்டங்கள்




***மனுசாஸ்திரம் பெண்கள் மீது சுமத்தும் இழிவைக் கண்டித்துப் பேசிய வி.சி.க. தலைவர் தொல். திருமாவளவன் மீது தமிழகக் காவல்துறை வழக்கு பதிவு செய்ததைக் கண்டித்தும் மனுசாஸ்திரத்தை தடை செய்யக் கோரியும் விடுதலை சிறுத்தைகள் கட்சி நடத்திய ஆர்ப்பாட்டத்தில் கழகத் தோழர்கள் பங்கேற்றனர்.***

அய்ரோப்பிய ஒன்றிய பெரியார் அம்பேத்கரிய தோழர்கள் கூட்டமைப்பு சார்பாக கடந்த மாதம் 26.09.2020 அன்று 'பெரியாரும் இந்திய அரசியலும்' என்ற இணையவழி கருத்தரங்கம் நடைபெற்றது. கருத்தரங்கத்தில் 'சனாதனத்தைப் புரிந்து கொள்ளாமல் பெரியாரைப் புரிந்து கொள்ள முடியாது' என்ற தலைப்பில் நாடாளுமன்ற உறுப்பினரும் விடுதலைச் சிறுத்தைகள் கட்சி தலைவருமான தொல்.திருமாவளவன் உரையாற்றினார். உரையில், மனுசாஸ்திரத்தில் பெண்களை இழிவாக குறிப்பிட்டுள்ளதை சுட்டிக்காட்டி பேசியுள்ளார். 40 நிமிடங்களுக்கு மேல் பேசிய உரையிலிருந்து 1 நிமிடமாக வெட்டி, ஒட்டி திருமாவளவன் பெண்களை இழிவு படுத்திவிட்டார் என்று பாஜக,ஆர்எஸ்எஸ் - காரர்கள் பிரச்சாரத்தில் இறங்கினர். காவல் நிலையத்தில் புகார் தந்தனர். 6 பிரிவுகளில் காவல்துறை வழக்கும் பதிவு செய்தது. இந்நிலையில் கடந்த வியாழன் அன்று விடுதலைச் சிறுத்தைகள் சார்பில் தமிழகம் முழுவதும் மனுசாஸ்திரத்தை தடை செய்ய வலியுறுத்தி 25.10.2020 கண்டன ஆர்ப்பாட்டங்கள் நடத்தப்பட்டன.

திருமாவளவனின் அறிவிப்பைத் தொடர்ந்து கழகத் தலைவர் கொளத்தூர் மணி திராவிடர் விடுதலைக் கழகமும் ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொள்ளும் என்று அறிவித்தார். 25.10.2020 அன்று தமிழகத்தின் பல பகுதிகளில் விசிக சார்பில் நடத்தப்பட்ட ஆர்ப்பாட்டத்தில், கோவை, திருப்பூர், செங்கல்பட்டு, கடலூர், சென்னை, சேலம் ஆகிய பகுதிகளில் திராவிடர் விடுதலைக் கழகத் தோழர்களும், பொறுப்பாளர்களும் கலந்து கொண்டனர். கழகத் தலைவர் கொளத்தூர் மணி மற்றும் சேலம் மாவட்டத் தோழர்கள் சேலத்தில் மாலை 4 மணியளவில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டனர். சேலம் கழக பொறுப்பாளர்கள், தோழர்கள் கழகத்தலைவர் கொளத்தூர் மணி உடன் கலந்து கொண்டனர். 100- ற்கும் மேற்பட்ட விசிக, திவிக தோழர்கள் கைது செய்யப்பட்டு மாலை 7 மணிக்கு மேல் விடுதலை செய்யப்பட்டனர்.

சென்னையில் மாலை 3 மணியளவில் திருமாவளவன் தலைமையில் நடைபெற்ற கண்டன ஆர்ப்பாட்டத்தில் திராவிடர் விடுதலைக் கழக பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் மற்றும் சென்னை மாவட்டக் கழகப் பொறுப்பாளர்கள் தோழர்கள் கலந்து கொண்டனர்.



ஆர்ப்பாட்டத்தில் உரையாற்றிய திருமாவளவன், திருமாவளவன் பெண்களை கொச்சைப் படுத்தி விட்டான் என்று கூறுகிறார்கள். நான் கூறுகிறேன் மனுநூல் தான் பெண்களை கொச்சைப்படுத்துகிறது.

வாருங்கள் விவாதிப்போம்.

இவர்கள் நினைக்கிறார்கள் வழக்குப் பதிவு செய்தால் திருமாவளவன் பின்வாங்கி விடுவார் என்று. ஆனால், இது என்னை இன்னும் ஒரு ஆயிரம் அடி முன்னால் கொண்டு போகும். அவர்கள் நினைத்தார்கள் 'இல்லை நான் அந்த கருத்தை கூறவில்லை' என்று பின்வாங்குவேன் என்று எண்ணியிருந்தார்கள். மனுதர்மம் தான் கூறியது என்று இன்றைக்கு தமிழகம் முழுவதும் ஆர்ப்பாட்டத்தை வைத்து கூறியிருக் கிறோம்.

"நான் இதை கர்வத்தோடு பேசுகிறேன் என்று யாரும் எண்ணிவிடக்கூடாது. தன்னம்பிக்கையோடும், நெஞ்சுரத்தோடும் பேசுகிறேன். புரட்சியாளர் அம்பேத்கரின் கொள்கைகளையும், தந்தை பெரியாரின் கொள்கைகளையும் உண்மையாக உணர்ந்து உள்வாங்கியிருப்பதால்; மாமனிதர் மார்க்ஸ் கொள்கைகளையும் அறிந்திருப்பதால் நான் இந்தக் கொள்கைகளை தன்னம்பிக்கையோடும், தைரியத்தோடும் பேசுகிறேன்.

சமூகத்தை சீரழிக்கும் இந்தக் கோட்பாடுகளை பற்றிப் பேசாமல் எப்படி பின்வாங்க முடியும். நான் கேட்கிறேன் அம்பேத்கர், பெரியாருக்குப் பின் தானே பெண்கள் இங்கே படிக்க முடிந்தது.

மனு நூலுக்கு எதிரான போராட்டம் தான் பகுத்தறிவுப் பகலவன் தந்தை பெரியாரின் போராட்டம். மனுதர்மத்திற்கு எதிரான போராட்டம் தான் புரட்சியாளர் அம்பேத்கரின் போராட்டம். நாம்இதை அடிப்படையில் புரிந்து கொள்ள வேண்டும். அம்பேத்கரின் பெரியாரின் பேரர்களாகிய நாங்கள் மனுசாஸ்திர எதிர்ப்பை முன்னெடுத்திருக்கிறோம்" என்று உரையாற்றினார்.

தலையங்கம்

## தமிழ்நாட்டில் நடப்பது ‘மனுசாஸ்திர’ ஆட்சியா?

மீண்டும் மனுசாஸ்திரம் விவாதத்துக்கு வந்துள்ளது. இதை வரவேற்கிறோம். விடுதலை சிறுத்தைகள் கட்சித் தலைவர் தொல். திருமாவளவன், காணொளி கருத்தரங்கம் ஒன்றில் மனு சாஸ்திரம், பெண்களை எப்படி இழிவுப்படுத்துகிறது என்பதை விளக்கினார். 40 நிமிட உரையிலிருந்து சில பகுதிகளை வெட்டி ஒட்டி 40 விநாடி உரையாக்கி பெண்களை இழிவுபடுத்துவதாகக் கூறி , பா.ஜ.க.வினர் தந்த புகாரில் தமிழக காவல்துறை 6 பிரிவுகளில் அவர் மீது வழக்கு தொடர்ந்திருக்கிறது.

நியாயமாக பெண்களையும் ‘சூத்திரர்’ களையும் இழிவுபடுத்தும் ‘மனுதர்ம சாஸ்திர’ நூல்களை அச்சிடுவோர் – விற்பனை செய்வோர் மீது இந்த வழக்குகளைத் தொடர்ந்திருக்க வேண்டும். தமிழக காவல்துறையே ‘மனுநீதி’ துறையாகவே செயல்பட்டு வருகிறது. பெண் பத்திரிகையாளரை இழிவுபடுத்திப் பேசிய திரைப்பட நடிகர் எஸ்.வி. சேகர் மீது நீதிமன்றமே கைது செய்ய உத்தரவிட்டும் இவருக்கு பாதுகாப்பு கொடுத்தது. கேரளாவில் நடந்த ‘உலக பிராமணர்’ மாநாட்டில் சாஸ்தா பல்கலைக்கழகப் பேராசிரியராக இருக்கும் வேங்கட சுப்ரமணியம் என்ற பார்ப்பனர், மனுசாஸ்திர அடிப்படையில் ‘பிராமணர்’ களே உயர்ந்தவர்கள் என்றும், நாய்களில் பொமரேனியன், இராஜபாளையம் என்று தனித் தனி ‘ஜாதி’ கள் இருப்பதுபோல் மனிதர்களிலும் உண்டு, ஒன்றாகக் கலக்க முடியாது என்றும் பேசினார். அவரது உரையின் ஒலிப்பதிவு நாடாவை சென்னை மாநகர காவல் துறை ஆணையரிடம் திராவிடர் விடுதலைக் கழகம் சார்பில் நேரில் சந்தித்து, நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கோரிக்கை விடுத்து ஒரு வருடம் ஓடி விட்டது. எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. மாறாக, கருப்பர் கூட்டம் என்ற ‘காணொளி’, கந்தர் சஷ்டி கவசத்திலுள்ள ஆபாச வரிகளை பகுத்தறிவுக் கண்ணோட்டத்தில் விளக்கியதற்காக இரண்டு தோழர்களை குண்டர் சட்டத்தில் கைது செய்துள்ளது. இத்தனைக்கும் அந்த காணொளிப் பதிவை நீக்கம் செய்து வருத்தமும் தெரிவித்த நிலையில் காவல்துறை ‘சங்பரிவாரங்களை’ ‘மனுதர்ம வாதிகளை’ திருப்திப்படுத்த இந்த அத்துமீறிய நடவடிக்கைகளை எடுத்தது. ‘கருப்பர் கூட்டம்’ என்றால் குண்டர் சட்டம் பாயும். அதுவே ‘பிராமணர் குலம்’ என்றால் காவல்துறை பாதுகாப்பு தரும் என்றால் காவல்துறையும் அதை இயக்கும் தமிழக அரசும் ‘மனுசாஸ்திரத்தை’ அமுல்படுத்திக் கொண்டிருக்கிறது என்பதுதானே, இதன் அர்த்தம்?

இந்திய அரசியல் சட்டமே மனுசாஸ்திரத்தைப் புறக்கணித்து, குப்பைக் கூடையில் வீசிவிட்டது. அரசியல் சட்டம் மக்கள் அனைவரும் சமம் என்று கூறுகிறது. இல்லை, மக்களில் ‘பிராமணர்’ உயர்ந்தவர், ‘சூத்திரர்’ இழிவானவர் என்கிறது மனுசாஸ்திரம். கல்வியை பெண்களுக்கும் சூத்திரர்களுக்கும் வழங்கக் கூடாது என்கிறது மனுசாஸ்திரம். 6லிருந்து 14 வயது வரை கல்வியை கட்டாய உரிமையாக்கியிருக்கிறது அரசியல் சட்டம் (Right to education act). பெண்களுக்கு குழந்தைப் பருவத்திலே திருமணம் செய்து விட வேண்டும் என்கிறது மனுசாஸ்திரம்; 18 வயதுக்கு உட்பட்டு திருமணம் செய்வது குற்றம் என்று கூறுகிறது சட்டம். கணவனை இழந்த பெண்கள் ‘கைம்மை நோன்பு’ இருந்து, மறுமணம் செய்யாமல் இருக்க வேண்டும் என்கிறது மனுசாஸ்திரம்; மறுமணம் செய்யும் உரிமையை வழங்கியிருக்கிறது சட்டம். பெண்களுக்கு சொத்து சேர்க்க உரிமை இல்லை என்கிறது மனு சாஸ்திரம்; உரிமை உண்டு என்கிறது சட்டம். ஆனாலும்கூட பெண்கள் வேதம் படிக்கக் கூடாது; சடங்குகளைச் செய்யக் கூடாது; அர்ச்சகர் ஆக முடியாது என்று ‘மனுசாஸ்திரம்’ பெண்கள் மீது சுமத்திய தடைகள் அப்படியே நீடிக்கின்றன.

பிரிட்டிஷ் இந்தியாவில் மெக்காலே என்ற அதிகாரிதான் மனுசாஸ்திர அடிப்படையில் நீதிமன்றங்கள் வழங்கிய தண்டனைகளுக்கு முற்றுப்புள்ளி வைத்து பொது கிரிமினல் சட்டத்தை அறிமுகப்படுத்தினார். மெக்காலே சட்டம் வருவதற்கு முன்பு சுமார் 70 ஆண்டுகள் நீதிமன்றங்களில் கிரிமினல் வழக்குகளில் ஒரே குற்றத்திற்கு பிராமணருக்கு குறைந்த தண்டனை; சூத்திரருக்கு மரண தண்டனை என்ற அடிப்படையிலேயே தீர்ப்புகள் வழங்கப்பட்டு வந்தன. ‘பிராமணர்’ கள் கொலை செய்தால்கூட தூக்குத் தண்டனை வழங்க தடை செய்யப்பட்டிருந்தது. உலகிலேயே எந்த ஒரு நாட்டிலும் இவ்வித கொடூரமான சட்டம் இருந்தது இல்லை. இப்போதும் ‘ஆகம விதிகள்’, ‘பழக்க வழக்கங்கள்’ என்ற சட்டப் பாதுகாப்புக்குள் மனுசாஸ்திரம் உயிர்த் துடிப்போடு பதுங்கி நிற்கிறது.

காவல்துறையின் ‘சைபர் கிரைம்’ பிரிவு – தொல். திருமாவளவனின் முழு உரையைக் கேட்காமல் ‘வெட்டி ஒட்டி திருகுதாளம்’ செய்யப்பட்ட நேர்மையற்ற எதிரிகள் தயாரித்த 40 விநாடி பேச்சின் அடிப்படையில் வழக்குத் தொடர்வது வன்மையான கண்டனத்துக்கு உரியது.

மனுசாஸ்திரத்தை தடை செய்ய வேண்டும் என்று தமிழகம் முழுதும் கண்டன ஆர்ப்பாட்டங்கள் நடந்துள்ளன. நாங்கள் மனுசாஸ்திரத்தைப் படித்ததே இல்லை; அதில் என்ன இருக்கிறது என்பது தெரியாது என்று பார்ப்பனர்கள் தந்திரமாக நழுவுகிறார்கள். அதே நேரத்தில் இந்து மதத்தைப் புண்படுத்திய தொல். திருமாவளவன் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று இரட்டை வேடம் போடுகிறார்கள்.

மனுசாஸ்திரம் தடை செய்யப்பட வேண்டும் என்பதைவிட அதன் கொடூரமான பாகுபாடுகள் கோயில் கர்ப்பகிரகத்திலும் பழக்க வழக்கங்களிலும் இருப்பதை தடை செய்ய வேண்டும் என்பதே நமது கோரிக்கையாக எழுப்பப்பட வேண்டும். சென்னை உயர்நீதிமன்றத்தின் முதல் இந்திய நீதிபதி என்ற பெருமைக்குரிய முத்துசாமி அய்யர், தன்னிடம் வந்த கணவன் மனைவியை அடித்து கையை உடைத்த வழக்கில் அப்படி அடிக்கலாம்; மனுசாஸ்திரப்படி குற்றமல்ல என்று தீர்ப்பளித்தார். அவருக்கு சென்னை உயர்நீதிமன்ற வளாகத்தில் சிலை வைத்திருக்கிறார்கள். ராஜஸ்தான் உயர்நீதிமன்ற வாயிலில் ‘மனு’வுக்கு கம்பீரமாக சிலை வைத்திருக்கிறார்கள். தங்களை மனுசாஸ்திர அடிப்படையில் ‘பிராமணர்’ களாக அடையாளப்படுத்தும் பூணூல் உபநயன சடங்குகளை செய்து வரும் பார்ப்பனர்கள், மனுசாஸ்திரத்தை நாங்கள் படித்ததே இல்லை என்று உண்மைக்கு மாறாகப் பேசுகிறார்கள்.

தமிழ்நாடு அரசு இப்படி ஒரு வழக்கை தோழர் தொல் திருமாவளவன் மீது பதிவு செய்ததற்காக வெட்கப்பட வேண்டும். இந்த உரையை ஒளிபரப்பிய பெரியார் வலைக் காட்சி மீதும் வழக்கு போட்டுள்ளார்களாம்.

தமிழ்நாட்டில் நடப்பது அம்மா ஆட்சியா? மனுதர்ம ஆட்சியா?

## கடவுள் நம்பிக்கை வீழ்ச்சி: உலகம் முழுவதும் சர்ச்சுகள் மூடப்படுகின்றன

வெளிநாடுகளில் மிகத் தீவிரமாக இயேசு கிறிஸ்துவை ஆராதித்த சமுதாயங்கள் தேவ மனிதர்கள் ஆலயங்களை விட்டு அவர்கள் தங்களைப் பிரித்துக் கொண்டு தேவன் இல்லை என்று மறுதலிக்கிற ஒரு கூட்டமாக பெருமளவு பெருகிக் கொண்டிருக் கிறார்கள். வெளிநாடுகளில் அநேக தேவாலயங்கள் மூடப்பட்டிருக்கின்றன. அநேக தேவாலயங்கள் பரிதாப நிலையிலே மாறியிருக்கிறது.

நம்முடைய தேசத்திலே நாம் தேவாலயங்களை கட்டிக் கொண்டிருக்கிறோம். ஆனால், வெளிநாடுகளிலே விசேசமாய் மேற்கத்திய நாடுகளில் ஆலயங்கள் மூடப்பட்டிருக்கிற நிலை அதிகரித்துள்ளது.

Spain என்கிற நாட்டில் The Church of Santa Barbara என்கிற ஒரு ஆலயம் மிக பிரம்மாண்டமாய் 100 ஆண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்டது. இன்றைக்கு அந்த ஆலயம் மூடப்பட்டது மட்டுமல்ல அதே ஆலயம் இன்றைக்கு ’ஸ்கேட்டிங்’ நடத்தும் அரங்கமாக ஆக மாறியுள்ளது. ஆலயத்துக்குள்ளேயே ஸ்கேட்டிங் விளையாடு கிறார்கள். அதற்கு வாடகைக்கு விட்டு சம்பாதிக்கிறார்கள்.

ஸ்காட்லாந்திலே கெல்வின்சைட் பெரிஷ் சர்ச் என்று ஒரு சபை மூடப்பட்டு இன்று அது நிகழ்ச்சி அரங்கமாகவும் இரவு விடுதியாகவும் மாறியிருக்கிறது. அதே ஆலயத்துக்குள்ளே குத்துச் சண்டை நிகழ்ச்சிகளை ஆலயத்துக்குள்ளேயே நடத்துகிறார்கள். சபைக்கு ஆட்கள் வருவதில்லை.

இதே போல இங்கிலாந்து தேசத்தில் புனித நிக்கோலஸ் சர்ச் என்று சொல்லப்படுகிற ஒரு ஆலயம் மிக பிரம்மாண்டமாய் கட்டப்பட்டது. ஆனால் இந்த ஆலயத்துக்கு மக்கள் வராமல், அவர்கள் சபைக்கு வராமல் போய், சபையை நடத்த முடியாமல் கடைசியிலே ஒரு தனி நபர் அதனை வாங்கி தனது சொந்த வீடாக மாற்றி விட்டார்.

நெதர்லாந்து நாட்டில் டொமினிக்கள் என்ற ஆலயம் எழுப்பப்பட்டது. ஆனால் அந்த ஆலயம் மூடப்பட்டு அது புத்தகம் விற்கக்கூடிய கடையாக மாற்றப்பட் டுள்ளது.புத்தகம் விற்றுக்கொண்டு இருக்கிறார்கள்.

பெனிசில்வேனியாவிலே புனித ஜான் பாப்டிஸ்ட் என்ற ஆலயம் கட்டப்பட்டது. இன்றைக்கு இது மதுபானக் கடையாக மாறியுள்ளது. அதே ஆலயத்திற்குள்ளே மது பானத்தை விற்கிறார்கள்.

1960 ஆண்டு முதல் இங்கிலாந்து தேசத்திலே மாத்திரம் 10,000 திருச்சபைகள் மூடப்பட்டிருக்கிறதாம்.

2020ஆம் ஆண்டு அடுத்த ஆண்டிற்குள்ளாக இன்னும் 4000 திருச்சபைகள் மூடப்படுமாம்.

இந்தியாவில் மட்டும்தான் இராமன் கோயில், கிருஷ்ணன் கோயில் என்று கட்டிக் கொண்டு அதை அரசியல் முதலீடாக்கி வருகிறார்கள்.

## இங்கிலாந்தில் விடுதலைப் புலிகள் மீதான தடை நீக்கம்

இங்கிலாந்தில் விடுலைப் புலிகள் இயக்கம் மீதான தடை நீக்கப்பட்டுள்ளது. கடந்த 2000ஆம் ஆண்டு, இங்கிலாந்து இந்தத் தடையை விதித்தது. 2009ஆம் ஆண்டு முள்ளிவாய்க்கால் இனப்படுகொலைக்குப் பிறகு புலிகள் துப்பக்கிகளை மவுனித்து விட்டதால், தடையை நீக்க வேண்டும் என்று இங்கிலாந்து உள்துறை அமைச்சகத்திடம் புலிகள் ஆதரவு இயக்கம் கோரிக்கை வைத்தது. உள்துறை அமைச்சகம் கோரிக்கையை நிராகரித்து விட்டது. தொடர்ந்து இங்கிலாந்தில் தடை செய்யப்பட்ட அமைப்பு களுக்கான மேல்முறையீட்டு ஆணையத்திடம் (பி.ஏ.ஏ.சி.) மேல்முறையீடு செய்யப் பட்டது. ஆணையம் தடையை நீக்கி அக்.21ஆம் தேதி உத்தரவிட்டது. தடை நீக்கத்தை எதிர்த்து இலங்கை அரசு மேல்முறையீடு செய்யப் போவதாக அறிவித்துள்ளது.

## வினா – விடை

- ‘நீட்’ உள் இடஒதுக்கீட்டுக்கு காலம் தாழ்த்தாமல் ஆளுநர் ஒப்புதல் தரவேண்டும்.
  **– உச்சநீதிமன்றத்தில் வழக்கு**

  விசாரணையை நீதிமன்றம் தேதி குறிப்பிடாமல் தள்ளி வைக்காமல் இருந்தால் சரி.

- ‘விஜயதசமி’ நாளில் அரசுப் பள்ளிகளில் மாணவர்களைச் சேர்க்க பள்ளிக் கல்வித் துறை உத்தரவு. **– செய்தி**

  அரசுப் பள்ளிகளையெல்லாம் இந்துக்களுக்கான பள்ளிகளாக மாற்றி விட்டீர்களா?

- தமிழக ஆளுநர் கூறியதை நாங்கள் வெளியில் சொல்ல முடியாது.
  **– ஸ்டாலினிக்கு அமைச்சர் ஜெயக்குமார் பதில்**

  உண்மையான பேச்சு. ‘சொல்ல முடியாது’ என்பதை மட்டும் ‘தலைகாட்ட முடியாது’ என்று நாங்க மாத்திக்கிறோம்.

- கொரானா தடுப்பு ஊசி இலவசமாக வழங்கப்படும் என்று நான் கூறியவுடன், மக்கள் பேராதரவு கண்டு ஸ்டாலின் நடுங்கிப் போய் விட்டார்.
  **– முதல்வர் எடப்பாடி**

  அப்ப, ஸ்டாலினை நடுங்க வைக்கத்தான் இந்த அறிவிப்பா? நாங்க கொரானா வைரஸ்தான் நடுங்கப் போவுதுன்னு தவறாக நம்பிட்டோம்.

- மோடியின் வீடியோ பேச்சை சில நிமிடங்களிலேயே மக்கள் ஆயிரக்கணக்கில் ‘டிஸ் லைக்’ செய்து விட்டனர். **– செய்தி**

  இது ஒரு பிரச்சினையா? அரவிந்த் கோஸ்வாமி, மாரிதாசிடம் சொன்னால் ‘லைக்’ காக மாற்றிக் காட்டி விடுவார்கள்.

- மத்திய அரசின் வேளாண்மை சட்டங்களை இரத்து செய்து, பஞ்சாப் சட்டமன்றம், மாநிலத்துக்கு தனியாக சட்டங்களை நிறைவேற்றியது. **– செய்தி**

  எங்க ‘அம்மா ஆட்சி’ யில் நாங்க நிறைவேற்றிய சட்டங்களை மத்திய அரசுதான் இரத்து செய்யும்; நாங்க வேடிக்கைதான் பார்ப்போம்...

- ஜெயலலிதா மரணத்தில் மர்மம் குறித்து விசாரிக்கும் ஆறுமுகசாமி ஆணையத்தின் பதவிக் காலத்தை 9ஆவது முறையாக நீட்டித்து தமிழக அரசு ஆணை.
  **– செய்தி**

  இந்தக் கோப்பை ஆளுநருக்கு அனுப்பியிருக்கலாம். அப்படியே கிடப்பில் அவர் போட்டிருப்பார்; வீண் செலவாவது குறைஞ்சிருக்கும்!

## தரவுகளுடன் ஆய்வாளர் ஜெயரஞ்சன் விளக்கம்

# 50 ஆண்டுகால திராவிட ஆட்சியில் தமிழகம் வளரவில்லை என்பது தவறு

*திராவிட விழுதுகள் சார்பில் கோவையில் நடைபெற்ற கருத்தரங்கில் தமிழகப் பொருளாதாரம் கடந்த 50 ஆண்டுகளில் வளர்த்தெடுக்கப்பட்ட வரலாறுகள் குறித்து பொருளியல் ஆய்வாளர் ஜெயரஞ்சன் ஆற்றிய உரை.*

தலைப்பை என்னையே வைத்துக் கொள்ள சொன்னதால் முதல் பகுதியை ‘தமிழக பொருளாதாரம்’ என்றும் தமிழகப் பொருளாதார கட்டமைப்பு வளர்ச்சிக்கு என்ன காரணம் என்பதை இரண்டாவது பகுதியாகவும் பேசலாம் என்று நினைக்கிறேன். பலரும் பொய்யான தகவல்களைப் பதிவு செய்கிறார்கள். அவர்கள் அவ்வாறு பேசியாக வேண்டும். இல்லாவிட்டால் அவர்கள் இருப்புக்கு அர்த்தம் இருக்காது. அவர்களின் இருப்பை நியாயப்படுத்த தமிழ்நாடு சீரழிந்துவிட்டது. அதிலும் குறிப்பாக 50 ஆண்டு காலமாக சீரழிந்துவிட்டது. இந்த 50 ஆண்டுகாலமாக என்பதை ஆரம்பித்து வைத்தது ’சோ இராமசாமி’. நாம் பள்ளிகளில் படித்தோமே கிறிஸ்து பிறப்பதற்கு முன், பின் என்பதைப் போல 1967ற்கு முன், பின் என்று சோ இராமசாமி தான் உருவாக்குகிறார். சரி தமிழ்நாடு அப்படி என்ன சீரழிந்து விட்டது என்று 1967ற்குப் பிறகு அவரால் ஒரு ஆதாரத்தைக் கூட காட்ட முடியாது. மிகக் கேவலமாக பேசுவதற்கும், கேவலமாக சித்தரிப்பதற்கும் தான் நேரத்தை செலவிட்டிருக் கிறார். நம்மவர்களுக்கு சொரிந்து கொள்வது மிகவும் பிடிக்குமே அது போல சோ இராமசாமியின் கதை யாடல்களை ஏன் என்று கேள்விகளே கேட்காமல் ஒருவரைப் பற்றி குறை சொல்வதற்கு இந்த கதையாடல்கள் பயன்படுத்தப்பட்டன.

“பிராமணிய”த்தால் இதுவரை என்ன செய்ய முடியவில்லை என்றால் இந்தத் தத்துவத்தை நேரடியாக எதிர்கொள்ளவே முடியவில்லை. நேரடியாக எதிர்க்க முடியாத காரணத்தினால் ‘cheap tactics’ சேறை வாரி இறைப்பது, புழுதி வாரி தூற்றுவது போன்று சோ. இராமசாமி முன்னெடுத்துச் செல்லும் போது அதை ஆதரித்து சென்றார்கள். இது டெல்லியை ஆளும் வர்க்கத்தினருக்கு வசதியாக இருந்தது. அதனால் பல முறை ஊடகங்களால் பேசப்பட்டது. நமது கருத்துக்களை டெல்லிக்குக் கூற வேண்டுமென்றால் ஆங்கிலத்தில் தான் கூற வேண்டும். ஆங்கிலத்தில் கூற சோ வகையறாக்கள் தான் இருந்தார்கள். எனக்குத் தெரிந்து ஆங்கில ஊடகத்தில் நமது கருத்துக்களை பேசியது எனது நெருங்கிய நண்பரான ஏ.எஸ் பன்னீர் செல்வம் தான். அவர் தான் முதன் முதலில் நமது கருத்துக்களை ஆங்கில ஊடகத்தில் பதிவு செய்தார். அதன் பிறகு தான் நாங்களும் ஆங்கிலத்தில். கருத்துக்களை பேச ஆரம்பித்தோம். அப்போதும் எங்களுடைய குரல்கள் பெரும்பான்மையற்றவை யாகவே இருந்தது. இப்பவும் அந்த குரல்கள் யார் கையில் உள்ளதென்றால் அவர்கள் கையில் தான் உள்ளது. அவர்கள் நமது கருத்துக்களை நிராகரிப்பார்கள் அல்லது சிறிய அளவிலான செய்திகளை மட்டும் வெளியிடுவார்கள் முழுதாக வெளியிடாமல். இந்த இடத்தை அடைவதற்கே நமக்கு இத்தனை ஆண்டுகள் எடுத்துள்ளன. நான் கடந்த 30 வருடங்களாக தமிழகத்தை பல்வேறு துறைகளில் பல ஆய்வுகளை மேற் கொண்டு பார்த்திருக்கிறேன். நான் மட்டுமல்ல என்னைப் போன்று நான்கைந்து பேர் இதே போன்று ஆய்வுகளை செய்துள்ளனர். அந்த ஆய்வுகளை இந்த ஆண்டு இறுதிக்குள் தமிழில் கொண்டு வர வேண்டும் என்று திட்டமிட்டுள்ளேன். அதற்கான பணிகள் துவங்கியிருக்கிறது. அதற்கான முன்னோட்டமாக எனது இந்த பேச்சை நீங்கள் வைத்துக் கொள்ளுங்கள்.

கடந்த 50 ஆண்டுகளில் தமிழ்நாடு எப்படி வளர்ச்சியடைந்துள்ளது. தற்போது எந்த இடத்தில் உள்ளது. எளிமையாக சொல்ல வேண்டும் என்றால், இந்திய பொருளாதாரம் 3 ட்ரில்லியன் டாலர். அந்த 3 ட்ரில்லியன் டாலரில் 1 ட்ரில்லின் டாலர் சுழற்றி மொத்தமாக நான்கு மாநிலங்களில் தான். நான்கு தென் மாநிலங்கள். நான்கு தென் மாநிலங்களும் சேர்ந்து 1 ட்ரில்லியன் டாலர் உள்ளது. மீதமுள்ள 27 மாநிலங்கள் சேர்ந்து தான் 2 ட்ரில்லியன் டாலர் உள்ளது. அது தான் பொருளாதாரத்தில் நமது பலம்.



இரண்டாவதாக தொழில்துறை. என்னுடைய தஞ்சை மாவட்டத்தில் நிலப் பத்திரங்களில் பெயருக்குப் பின்னால் ‘சுகஜீவனம்’ என்று எழுதியிருக்கும். பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்தவரென்றால் சுக ஜீவனம் என்றிருக்கும். பட்டியலின சமுதாயத்தை ’கஷ்ட ஜீவனம்’ என்று குறிப்பிடுவார்கள். நிலத்தை விற்பான். ஆனால் சுகஜீவன மாம். இதிலிருந்தே புரிந்து கொள்ளலாம் தஞ்சை மாவட்ட சமுதாயங்கள் எப்படிப்பட்ட சமுதாயம் என்று. கோயம்புத்தூரில் இப்படி யாராவது பெயருக்குப் பின் சுகஜீவனம் என்று எழுதுவார்களா? மாட்டார்கள். அதன் விளைவு என்னவென்றால் 50 வருடங்களுக்கு முன்பு பணக்கார மாவட்டம் என்றால் அது தஞ்சை மாவட்டம் தான். தற்போதுகூட அங்கே இருக்கும் கோவில்களைப் போன்று கட்ட முடியாது. அதில் எனக்கும் ஒரு மாற்றுக் கருத்து உள்ளது. தஞ்சை பெரிய கோவில் வெளி நாடுகளில் கொள்ளையடித்த செல்வத்தால் கட்டப்பட்டதாக இருக்கலாம் என்று எனக்கு ஒரு எண்ணம் உள்ளது. அந்த ஓரிடத்தில் இருந்து அவ்வளவு செல்வங்களை வைத்துக் கட்டுவது என்பது நடக்காத ஒன்று. அவ்வளவு கோயில்களை கட்டியிருக்கிறார்கள். அதிகமான நிலங்களை பார்ப்பனர்களுக்கு தானமாக கொடுத் துள்ளார்கள். இவையெல்லாம் பழைய வரலாறு. ஆனால் தற்போது தமிழகத்திலேயே மிக மிக ஏழ்மையான மாவட்டமாக தஞ்சை மாவட்டம் மாறியிருப்பதற்கு காரணம் இந்த சுகஜீவன மாதிரி ‘போலிப்’ பெருமை தான். ஆனால் மொத்த தமிழ்நாட்டை எடுத்துப் பார்த்தோமானால் சுகஜீவனம் இல்லை. கஷ்ட ஜீவனத்தில் தான் நிற்கிறது. அதன்படி தொழில் துறையில் பல தளங்களில் முன்னோடியான மாநிலம் தமிழ்நாடு.

தொழில்களில் பெருந்தொழில்கள், சிறுத் தொழில்கள் என்று உள்ளது. அப்படி இந்திய அளவில் பெரும் தொழில்கள் அதிக அளவில் இருக்கக் கூடிய மாநிலம் தமிழ்நாடு தான்.

### சிறு மற்றும் நடுத்தர தொழில்கள்

சிறு மற்றும் நடுத்தர தொழில்களை பல்வேறு விதமாக அளந்து பார்க்கலாம். அதில் ஒரு அளவீட்டு முறை எத்தனை நிறுவனங்கள் இருக்கின்றன என்பதாகும். அதிக அளவில் பெரும் தொழில்கள் இருக்கும் மாநிலமும் தமிழ்நாடு தான், சிறு, நடுத்தர தொழில்கள் அதிகமாக இருப்பதும் தமிழ்நாடு தான். அடுத்ததாக சிறு, நடுத்தர, பெரு நிறுவனங்களில் எத்தனை ஆட்களை வேலைக்கு அமர்த்தியிருக் கிறார்கள் என்று பார்த்தோமானால் அதிலும் தமிழ் நாடு தான் அதிகப்படியான ஆட்களை வேலையில் அமர்த்தியுள்ளது. அடுத்ததாக நாம் பார்க்க வேண்டியது வேலையாட்களுக்கு எவ்வளவு ஊதியம் கொடுக்கிறார்கள் என்பது. அதிலும் வேலையாட் களுக்கு மற்ற மாநிலங்களை ஒப்பிடுகையில் தமிழகம் தான் அதிகமான ஊதியத்தைக் கொடுத்து வருகிறது.

நான்காவதாக ஒரு துறைக்கு மட்டும் முக்கியத்துவம் கொடுத்து வளர்ப்பது கிடையாது. நம்முடன் போட்டி போடுகிற மாநிலங்கள் என்னவெல்லாம் இருக்கிறது. மகராஷ்டிரா, குஜராத் ஆகிய மாநிலங்கள் இருக்கிறதென்றால் மகராஷ் டிராவை ஒப்பிட்டோமானால் தமிழ்நாட்டிலுள்ள பெருநிறுவனங்களை விட மகராஷ்டிராவில் பத்தாயிரம் பெரு நிறுவனங்கள் குறைவாக உள்ளது. சிறு தொழில்களை ஒப்பிட்டோமானால் நம்மை விட 25 ஆயிரம் முதல் 30 ஆயிரம் வரை குறைவு. ஆனால் எது அவர்களிடம் அதிகமாக இருக்குமென்றால் முதலீடு அதிகமாக இருக்கும். நாம் சிறிய அளவிலான பணத்தை முதலீடு செய்து அதிக அளவிலான வேலையாட்களை அமர்த்தி வேலை செய்கிறோம். மற்ற மாநிலங்களான மகராஷ்டிரா, குஜராத்தில் பெரிய அளவிலான முதலீடுகளை செலுத்தி குறைவான ஆட்களை வைத்து வேலை செய்வார்கள். அதன் விளைவு என்னவென்றால் அவர்களுடையது ‘capital intensive’ (தீவிர மூலதனம்) ஆக இருக்கும். தமிழ்நாடு ‘labour intensive’ (அதிக தொழிலாளர்கள்) ஆக இருக்கும். நான் முன்கூட்டியே கூறியதைப் போல் நமது மாநிலம் அனைத்து துறைகளிலும் சமமாக முன்னேறுகிறது. குஜராத்தை எடுத்துக்கொண்டோமானால், பெட்ரோல் சுத்திகரிப்பை எடுத்துவிட்டோமானால் தொழில்துறையில் 10 ஆவது இடத்திற்கு சென்று விடும். ஏனென்றால் ரிலையன்சும், எஸ்ஸார் குழுமம் (Essar) குஜராத் என்பதால் அங்கே அதிகமான முதலீடுகளை செலுத்தியுள்ளனர். இந்த இரண்டு நிறுவனங்களை தவிர்த்தால் குஜராத் ஒன்றுமில்லை. தமிழ்நாட்டில் அனைத்து தொழில்களும் பன்முகத் தன்மையுடன் வளர்ந்திருப்பதால் ஏதோ ஒன்று நஷ்டம் ஆனாலும் பொருளாதாரம் சரிவைக் காணாது. தமிழ்நாட்டில் ஏதாவது ஒரு துறை சரிவை காண்கிறதென்றால், மாநிலத்தின் மொத்த பொருளாதாரமும் பாதிப்படையாது. ஆனால், பெட்ரோல் சுத்திகரிப்பு பாதிப்படைகிறதென்றால் குஜராத்தின் பொருளாதாரம் உடனடியாக சரிவைக் காணும். அதே போல ஆட்டோ மொபைல்ஸ் எடுத்து பார்த்தோமானால் தமிழ்நாடு அதிலும் முதன்மையாகத் தான் இருக்கிறது. ஆனால் மகாராஷ்டிரா ஆட்டோ மொபைல்ஸை மட்டுமே நம்பி இருக்கிறார்கள். இது போல ஒரே துறைகளை மட்டும் அந்த மாநிலங்கள் நம்பியிருப்பதால் ஒரு சிறு இடையூறு வந்தாலும் அவர்களால் தாக்குப் பிடிக்க முடியாது. அதனால் தமிழ்நாடு என்ன செய்திருக்கிற தென்றால் கவனமாக பன்முகத்தன்மையுடன் துறைகளை வளர்த்துள்ளது.

இதைவிட ஆச்சரியமான தகவல் என்ன வென்றால் தொழில்துறையின் வளர்ச்சியை வரைபடமாக வரைந்தால் பரவலாகக் காணப்படும். சென்னையில் ஒரு பெரிய குவியலாக இருக்கிற தென்றால் இது சென்னை முதல் கோயம்புத்தூர் வரை இருக்கும். இது முழுவதும் தொழில்துறை சரியான விகிதத்தில் வளர்ந்திருக்கும். இங்கு மட்டும் தான் இருக்கிறதென்றால் இல்லை ஒரு சுழற்சியாக அனைத்து இடங்களிலும் தொழில் துறைகள் இருக்கிறது. ஆனால் தொழில்துறைகளே இல்லாத இடம் எதுவென்றால் ? அது தஞ்சை மாவட்டம் தான். மற்ற அனைத்து மாவட்டங் களிலும் இருக்கும். அடுத்து கன்னியாகுமரியில் இருக்காது. கன்னியாகுமரி சிறிய மாவட்டம். இது போன்று வரைபடம் நாங்கள் தயாரிக்கும் போது இரண்டு மாவட்டங்களை கணக்கில் எடுத்துக் கொள்ள மாட்டோம். ஒன்று கன்னியாகுமரி மற்றொன்று நீலகிரி. நீலகிரி மலைகள் அதிகமுள்ள பகுதியாக இருக்கும். கன்னியாகுமரி எதற்கும் சேராததாக இருக்கும். அதனால் இந்த இரண்டு மாவட்டங்களை விட்டு விடுவோம். அதைத் தவிர்த்து மற்ற மாவட்டங்களில் தொழிற்சாலைகள் பரவலாக இருக்கும். ஆனால் மகாராஷ்டிராவை எடுத்துப் பார்த்தோமானால் ஒரே ஒரே ‘corridor’ மட்டுமே இருக்கு. பாம்பே முதல் பூனா corridor. அந்த corridorக்குள் தான் மகராஷ்டிராவின் அனைத்து தொழில்துறைகளும் அடங்கியிருக்கும். அந்த வளர்ச்சியை குறிப்பாக உணரவேண்டுமானால், எத்தனை பேர் வேளாண் துறைகளில் இருக்கிறார்கள். எத்தனை பேர் வேளாண் துறைகளை விட்டு வெளியேறியிருக்கிறார்கள் என்பதைத் தான் முதலாவதாக பார்ப்போம். அடுத்து தான் தொழில் துறைக்கு வருவோம்.

### நகர மயமாதலில்

அடுத்து சிறு மாநிலங்கள் தவிர, சிறு மாநிலங்களென்றால் பாண்டிச்சேரி, கோவா இவையெல்லாம் சிறு மாநிலங்கள். இவையெல்லாம் ஒரு மாவட்ட அளவிற்குக் கூட பெரியதாக இருக்காது. அந்த மாநிலங்களை விட்டுவிட்டு அடுத்த பெரிய மாநிலங்களை கணக்கிலெடுத்துப் பார்த்தால் மிக அதிகமான அளவில் நகர்மயமான மாநிலங்களில் தமிழ்நாடு தான் முதல் மாநிலமாக உள்ளது. கிட்டத்தட்ட 55 விழுக்காடு மக்கள் நகரங்களில் வசிக்கிறார்கள் தமிழ்நாட்டில் மட்டும். அநேகமாக வரப்போகிற ‘சென்செஸ்சில்’ 60 யை தொட்டுவிடும் என்று நினைக்கிறேன். இப்படி மக்கள் அதிகமாக நகரங்களில் வந்து குடியேறுவது என்பது எதைக் காட்டுகிறது என்றால் மக்களின் வாழ்வாதாரம் வேளாண் துறையை நம்பி இல்லை என்பதற்கான ஒரு குறியீடு. வேளாண் துறையை நம்பி இல்லாதது என்பது எதனால் நல்ல செய்தி என்றால், அதிலுள்ள உற்பத்தித் திறன் என்பது மிக மிகக் குறைவு. தொழில்துறைகள் போன்று உற்பத்தித் திறன் அதில்

(4ஆம் பக்கம்)

DATE OF PUBLICATION - EVERY THURSDAY TAMIL WEEKLY REG.NO.TN/CC(S)DN/459/19-21 LICENCED TO POST WPP NO.TN/PMG(CCR)/WPP-462/2019-2021
PURATCHI PERIYAR MUZHAKKAM REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TNTAM/2002/07776

## கொளத்தூர் மணி வேண்டுகோள்

# பெரியாரிஸ்ட் என்று சொல்லிக் கொள்ளாதீர்கள் குஷ்பு !

அண்மையில் பாரதிய ஜனதா கட்சியில் தன்னை இணைத்துக் கொண்டிருக்கிற குஷ்பூ, ஒரு நேர்காணலில் அவர் தன்னை பெரியாரிஸ்ட் என்று அறிமுகப்படுத்திக் கொள்கிறார். நேர்காணல் கண்டவர் ஒரு கேள்வியை வைக்கிறார் பெண்ணுரிமைவாதி என்று சொல்லிக்கொள்ளுங்களேன் ஏன் பெரியாரிஸ்ட் என்று சொல்லுகிறீர்கள் என்று, அப்போது சொல்கிறார் பெரியாருடைய எல்லா கருத்துக்களையும் கடவுள் மறுப்பை போன்று அனைத்து கருத்துக்களையும் நான் ஏற்றுக் கொள்ளவில்லை என்பது போலச் சொல்கிறார்.

வேண்டாம் கடவுள் மறுப்பை விட்டுவிடுங்கள் பெண்ணுரிமை வாதியாகச் சொல்லுங்கள்.., காஷ்மீர் மாநிலத்தில் ஆசிபா என்கிற ஒரு சிறுமியை இந்து மதத்தை காப்பாற்றுவதாகச் சொல்கிற இந்த பாரதிய ஜனதா கட்சிக்காரர்கள் இந்து கோவிலுக்குள் சில நாட்கள் அடைத்து வைத்திருந்து தொடர்ந்து பாலியல் வல்லுறவுக்கு ஆளாக்கிக் கொலை செய்து கொன்று புதைத்தார்கள். இப்போது ஹத்ராஸ் மனிஷா வல்லுறவுக்கு ஆளாக்கி சிதைத்த பெண்ணை குடும்பத்தினரிடம் அனுமதி பெறாமலேயே காவல் துறையே எரிக்கின்றனர். இந்தக் கட்சியில் இருந்து கொண்டு பெண்ணுரிமை பேசப் போகிறாரா என்று எனக்குத் தெரியவில்லை.

அடுத்து பெரியாரின் முக்கிய கொள்கையான இந்து மத ஜாதிக் கட்டமைப்பில் சூத்திர, பஞ்சமர்களுக்கு வழங்கப்படும் இடஒதுக்கீடு என்ற வாய்ப்பு மறுக்கப்பட்ட மக்களுக்கான சமூக நீதி, மக்கள் தொகையில் அதிக எண்ணிக்கையிலுள்ள பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு 27 சதவீத இட ஒதுக்கீடு தருகிறார்கள். அதுவும் முழுமையாக நிரப்புவதில்லை. ஆனால் 15 சதவீதம் மட்டுமே உள்ள உயர்ஜாதியினருக்கு உயர்ஜாதி ஏழைகள் என்று 10 சதவீத இட ஒதுக்கீடு வழங்குகிறார்கள். தமிழக மருத்துவக் கல்லூரிகளில் படித்த மாணவர்களுக்கான அகில இந்திய கோட்டாவில் இடஒதுக்கீடு வழங்க மறுக்கிறார்கள்.

பெரியாரின் முதன்மையான கொள்கை சாதி ஒழிப்பு ஆனால் பாரதிய ஜனதா கட்சி ஆளுகின்ற மாநிலங்களில் தான் பார்க்கிறோம் தெருவில் நடந்ததற்காக ,குழாயில் தண்ணீர் எடுத்ததற்காக,செருப்புப் போட்டதற்காக, தொட்டு விட்டதற்காக கொன்றழிக்கப்படுவதும் அவர்களை அவமானப்படுத்துவதும் காணொளிக் காட்சிகளாக வந்து கொண்டிருக்கிறது. அப்போது, பெரியாரின் பெண்ணுரிமைக்கு எதிரான கட்சியில், பெரியாரின் ஜாதி ஒழிப்பிற்கு எதிரான கட்சியில், பெரியாரின் சமூக நீதியை குழி தோண்டி புதைக்கின்ற கட்சியில் இருந்து கொண்டு பெரியாரிஸ்ட் என்ற பெயரை ஏன் சொல்ல வேண்டும் ? அருள்கூர்ந்து சொல்லாதீர்கள் என்று சொல்வது தான் என் வேண்டுகோள்.

பெண்ணுரிமை என்று பார்த்தால் கூட இவர்களுடைய அமையப் போகிற ராமராஜ்ஜியத்தில் கதாநாயகன் ராமன் என்ன செய்தான் நேரடியாக கடவுளை வழிபட்டதற்காக சம்பூகன் என்ற சூத்திரனை வெட்டிக் கொன்றான். அது தான் ராமராஜ்ஜியம். நேரடியாய் தாழ்த்தப்பட்டவர்கள், பிற்படுத்தப்பட்டவர்கள் கடவுளைக் கூட கும்பிட முடியாது என்கிறான். கருவுற்றிருந்த மனைவி மீது சிறு சந்தேகம் வந்ததும் காட்டுக்கு துரத்தினான். அந்த இராமனுக்கு கோயில் கட்டுகிற கட்சியில் போய் இணைந்து கொண்டு பெரியாரிஸ்ட் என்று கூறிக் கொள்ளலாமா? இனிமேலாவது பெரியாரிஸ்ட் என்று சொல்லிக் கொள்ளாதீர்கள் என்ற அன்பு வேண்டுகோளை குஷ்பு முன் வைக்க விரும்புகிறேன்.

**– கொளத்தூர் மணி, முகநூல் பேட்டி**

# பசுவின் சாணம் கதிர்வீச்சைத் தடுக்குமா? சங்கிகளிடம் ஆதாரம் கேட்டு 600 விஞ்ஞானிகள் கடிதம்

பசுவின் சாணத்தால் செய்யப்பட்ட சிப், செல்போனிலிருந்து வரும் கதிர்வீச்சைத் தடுக்கும் தன்மை கொண்டது என்று ராஷ்ட்ரிய காமதேனு ஆயோக் தலைவர் கூறியதற்கு ஆதாரத்தையும், அறிவியல் ஆய்வுகளையும் கொடுங்கள் என்று 600 அறிவியல் விஞ்ஞானிகள் கடிதம் எழுதியுள்ளனர்.

ராஷ்ட்ரிய காமதேனு ஆயோக் என்பது மத்திய அரசின் அமைப்பாகும். மத்திய மீன்வளத்துறை, கால்நடை வளர்ப்பு மற்றும் பால்வளத்துறையின் கீழ் இந்த அமைப்பு வருகிறது. இந்த ராஷ்ட்ரிய காமதேனு ஆயோக்கின் நோக்கம், பசுக்களைப் பாதுகாத்து, அதன் வளர்ச்சியை மேம்படுத்துவதாகும்.

ராஷ்ட்ரிய காமதேனு ஆயோக் அமைப்பின் தலைவர் வல்லபாய் கதிரியா கடந்த 12-ம் தேதி ஊடகங்களுக்குப் பேட்டி அளித்தார். அப்போது, பசுவின் சாணத்தால் செய்யப்பட்ட “சிப்” போன்ற அட்டையை வல்லபாய் அறிமுகம் செய்தார்.

அந்த சிப்பின் பெயர் “கவுசத்வா கவாச்சி” என்ற அறிமுகம் செய்த வல்லபாய், அறிவியல் பூர்வமாக பசுவின் சாணத்தால் செய்யப்பட்ட இந்த சிப், செல்போன் கதிர்வீச்சைத் தடுக்கும் வல்லமை கொண்டது என்று தெரிவித்தார்.

பசுவின் சாணத்தால் செய்யப்பட்ட சிப்பை ஒவ்வொருவரும் வைத்திருந்தால் அனைவரையும் பாதுகாக்கும். இது கதிர்வீச்சைத் தடுக்கும் தன்மை கொண்டது என்று அறிவியல் பூர்வமாக நிரூபிக்கப்பட்டுள்ளது. இந்த சிப்பை மொபைல் போனில் பயன்படுத்தி, கதிர்வீச்சைத் தடுக்க முடியும். மக்கள் நோயிலிருந்து தங்களைக் காத்துக்கொள்ள முடியும் என்று வல்லபாய் தெரிவித்தார்.

இந்நிலையில் வல்லபாய் கத்திரியா கூறிய கருத்தைக் கேட்டு அதிர்ச்சி அடைந்த விஞ்ஞானிகள் 600க்கும் மேற்பட்டோர் பசுவின் சாணத்தால் செய்யப்பட்ட சிப், கதிர்வீச்சைத் தடுக்கும் என்று எந்த ஆய்வு கூறியது? அந்த ஆய்வு எங்கு நடத்தப்பட்டது, என்ன மாதிரியான ஆய்வுகளில் எந்தெந்த முடிவுகள் கிடைத்தன என்று கேட்டு ராஷ்ட்ரிய காமதேனு ஆயோக்கிற்கு கடிதம் எழுதியுள்ளனர்.

இந்தியன் மார்ச் ஃபார் சயின்ஸ் அமைப்பின் அறிவியல் விஞ்ஞானிகள் குழு இந்தக் கடிதத்தை ராஷ்ட்ரிய காமதேனு ஆயோக்கிற்கு எழுதியுள்ளனர்.

அதில், “பசுவின் சாணத்தால் உருவாக்கப்பட்ட சிப், மொபைல் போனில் கதிர்வீச்சைத் தடுக்கும் என்று எந்த ஆய்வுகள் கூறின? ஆய்வு நடத்திய அறிவியல் வல்லுநர்கள் யார், அறிவியல் பூர்வமான ஆதாரங்களை வெளியிட வேண்டும். அந்த ஆதாரங்கள் எந்த இதழில் பிரசுரம் ஆகின என்பதை வெளிப்படையாக அறிவிக்க வேண்டும். நீங்கள் நடத்திய ஆய்வில் எந்த மாதிரியான தரவுகள் சேகரிக்கப்பட்டன, ஆராய்ச்சியில் கிடைத்த விவரங்களையும் வெளியிட வேண்டும்’’ எனத் தெரிவித்துள்ளனர்.

இதுகுறித்து மத்திய தொழில்நுட்ப மேம்பாட்டுத்துறையின் இயக்குநர் டாக்டர் ரகுநாதனிடம் நிருபர் கேட்டபோது, “நிச்சயமாக பசுவின் சாணத்தால் செய்யப்பட்ட சிப், செல்போன் கதிர்வீச்சை ஒருபோதும் தடுக்காது, வாய்ப்பே கிடையாது.

ஏறக்குறைய 100 ஆண்டுகளுக்கும் மேலாக கதிர்வீச்சு குறித்து ஆய்வு நடத்தப்பட்டு வருகிறது. எந்தவிதமான ஆதாரங்களும் இல்லை. பசுவின் சாணம் நோய் எதிர்ப்புச் சக்தி உடையது என்று ஆய்வுகளில் கூறப்பட்டுள்ளன. ஆனால், கதிர் வீச்சைத் தடுக்கும் என எந்த ஆய்விலும் இல்லை” எனத் தெரிவித்தார்.

“புரட்சிப் பெரியார் முழக்கம்”
ஆண்டுக்கட்டணம்
ரூ.200
தொடர்புக்கு: ஆசிரியர்,
29, பத்திரிகையாளர் குடியிருப்பு, திருவள்ளுவர் நகர்,
திருவான்மியூர், சென்னை-41.
✆ 7373684049

(3ஆம் பக்கத் தொடர்ச்சி)

கிடையாது. உற்பத்தித் திறன் அதிகமாக இருப்பதால் தான் அதிக இலாபம் பார்க்க முடிகிறது அதிக ஊதியமும் கொடுக்க முடிகிறது. வேளாண் துறையில் உற்பத்தித் திறன் குறைவாக உள்ளதால் அதிகமான ஊதியத்தை அத்துறையில் வழங்க முடியவில்லை. ஒரு ஏக்கர் நிலத்தை வைத்துக் கொண்டு எவ்வளவு உற்பத்தி செய்து விட முடியும் ? மன்மோகன் சிங் கூறினார் அதிகமான மக்கள் வேளாண் துறையை நம்பி இருக்கிறார்கள்; வேளாண்மையை விட்டு வாருங்கள் என்று கூறினார். அனைவரும் கிண்டலடித்தார்கள் என்ன இவர் ’பைத்தியம்’ போல கூறுகிறாரே என்று. அதற்கான காரணமென்னவென்றால் வரவில்லையென்றால் அதே இடத்தில் தேங்கி இருக்க வேண்டியது தான்.

எனது ஊரிலிருந்து வெளியூருக்கு வேலைக்குச் சென்றவர்களிடம் நான் கூறுவது என்னவென்றால் ஊருக்கு வராதீங்க. அங்கேயே இருங்கள் என்று தான் கூறுவேன். காரணம் என்னவென்றால், இங்கே உற்பத்தி மிகவும் குறைவு. இது ஒரு ‘பொறி’ போன்றது அதில் சிக்கிவிட்டீர்களென்றால் மீண்டு எழவே முடியாது. அது உங்களைத் திரும்ப திரும்ப அதனுள்ளேயே வைத்துக் கொள்ளும். அதனால் அதை விட்டு நீ வெளியேறனும். அப்படி வெளியேறிய சமுதாயம் தான் தமிழ் சமுதாயம் ! இந்தியாவிலேயே இது போல வேறெந்த சமுதாயங்களும் இன்னமும் வெளியேறவில்லை. பாண்டிச்சேரி போன்ற சிறு மாநிலங்களுடன் நீங்கள் ஒப்பிடவேக்கூடாது. ஏனென்றால் அங்கு விவசாய நிலங்களே கூட நகர்ப்புறத்தைச் சார்ந்ததாக இருக்கும். நீங்கள் கர்நாடகா, ஆந்திராவுடன் ஒப்பிட்டுப் பார்க்க வேண்டும். அப்படி பார்க்கும் போது மிகப் பெரும்பான்மையான மக்கள் தமிழ்நாட்டில் நகர்ப்புறங்களை நோக்கி நகர்ந்து விட்டார்கள்.

(தொடரும்)

## நிமிர்வோம் 16 வது வாசகர் வட்ட கூட்டம்

17.10.2020 அன்று மாலை மாலை 6 மணியளவில் இணைய வழியாக நடைபெற்றது. கழகத்தில் புதிதாக இணைந்துள்ள தோழர். நாசர் ப்ரூனோ துவக்க உரையாற்றினார். கழகத் தலைவர் கொளத்தூர் மணி புதிய கல்விக் கொள்கை குறித்து விரிவாக உரையாற்றினார். நிகழ்வை யுவராஜ் ஒருங்கிணைத்தார். வாசகர் வட்ட நிகழ்வு திராவிடர் விடுதலைக் கழகம் முகநூல் பக்கத்தில் நேரலை செய்யப்பட்டது.

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted: 29th October 2020

OWNER AND PUBLISHER BY : K. RAJENDRAN, FROM 29, JOURNALISTS COLONY, THIRUVALLUVAR NAGAR, THIRUVANMIYUR, CHENNAI - 600 041.
AND PRINTED BY : S. THEESMAS, AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014.
EDITOR ; K. RAJENDRAN